VetriPadigal.com

இந்த வலைதளம் TNPSC தேர்விற்கு தயார் செய்யும் நண்பர்களுக்கு உதவும் நோக்கத்தில் தமிழக அரசின் புதிய சமச்சீர்க்கல்வி பாடப்புத்தகத்திலிருந்து பாடக்குறிப்புகள் வழங்குப்பட்டுள்ளது. மேலும் இதில் 5000 க்கும் மேற்பட்ட Objective Type Questions வழங்கப்பட்டுள்ளது. இதிலுள்ள மாதிரித் தேர்வுகளில் நீங்கள் பயிற்சி பெறலாம். தொடர்ந்து புதிய பாடக்குறிப்புகளும் வழங்க இருக்கிறோம்....

https://www.vetripadigal.com/
https://www.vetripadigal.com/tnpsc-online-test/

# 7 ஆம் வகுப்பு – சமூக அறிவியல்

# குடிமையியல்

## சமத்துவம்

- “சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும். முதலாவதாக சமூக சிறப்புரிமை இல்லாததும் இரண்டாவதாக போதுமான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுவதும் ஆகும்” – பேராசிரியர் லாஸ்கி.
- இங்கிலாந்தில் ‘சட்டத்தின் ஆட்சி’ என்ற கோட்பாடு உள்ளது. அங்கு சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம் என்பதோடு அது அனைவரையும் சமமாக நடத்துகிறது.
- சட்டத்தின் ஆட்சி என்ற பதத்தை ஏ.வி. டைசி என்ற பிரிட்டிஷ் வல்லுநர் உரைத்தார்.

### அரசியல் சமத்துவம்

- வாக்குகளிக்கும் உரிமை,
- பொது அலுவலகத்தில் பங்குகொள்ளும் உரிமை,
- அரசை விமர்சனம் செய்யும் உரிமை

- இந்தியாவில் 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை அழிக்கப்படுகிறது.
- 1952 நடைபெற்ற முதல் தேர்தலிலேயே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.
- சுவிட்சர்லாந்து நாட்டில் 1971 ஆம் ஆண்டில் தான் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப் பட்டது.
- இந்தியாவில் 25 வயது பூர்த்தி அடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம்.

**பாலின சமத்துவம்**

- தமிழ்நாட்டில் பெண்களை மேம்படுத்தும் விதமாக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- 2017ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான 17 குறிக்கோள்களில் பாலின சமத்துவம் என்பது ஐந்தாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பு அதன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14-18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.
- சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின்படி சமமான பாதுகாப்பு என்பது அரசியலமைப்பு சட்டப்பிரிவு 21 ல் மேலும் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது.
- சட்டப்பிரிவு 14 சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- சட்டப்பிரிவு 15 பாகுபாட்டை தடை செய்கிறது.
- சட்டப்பிரிவு 16 பொது வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கிறது.
- சட்டப்பிரிவு 17 தீண்டாமையை ஒழிக்கிறது.
- சட்டப்பிரிவு 18 பட்டங்கள் அளித்து வேறுபடுத்துதலை தடை செய்கிறது.

## அலகு - 2

## அரசியல் கட்சிகள்

- இந்தியா 1950 ஆம் ஆண்டு மக்களாட்சி நாடானது.

**கட்சிகளின் அங்கிகாரம்**

- ஒரு கட்சி அங்கீகரிக்கப்படுவதற்கு ஐந்து ஆண்டுகள் அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
- வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 6% ஓட்டுக்களை இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெற்றிருத்தல் வேண்டும்.

## கட்சிகள் அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்

- இந்தியாவில் அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

## தேசியக் கட்சிகள்

- மக்களவைத் தேர்தலில் அல்லது நான்கு மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தலில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் ஒரு கட்சி 6% வாக்குகளை பெற்றிருத்தல் வேண்டும்.
- ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களில் நான்கு மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.
- இறுதியாக நடைபெற்ற மக்களவை தேர்தலில் குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் 2% தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

## மாநிலக் கட்சிகள்

- மாநில சட்டப் பேரவைக்கான தேர்தலில் செல்லத்தக்க வாக்குகளில் குறைந்தபட்சம் 6% வாக்குகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- 25 தொகுதிகளுக்கு ஒரு மக்களவைத் தொகுதி அல்லது சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.
- மாநில சட்டமன்ற மொத்த தொகுதிகளில் 3% தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும்.

## கட்சி முறைகளின் வகைகள்

- **ஒரு கட்சி முறை** - சீனா, வட கொரியா மற்றும் கியூபா ஆகிய நாடுகளில் நடைமுறையில் உள்ளது
- **இரு கட்சி முறை** - பிரிட்டன் (தொழிலாளர் கட்சி மற்றும் பழமைவாதக் கட்சி) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி ) காணப்படுகிறது.
- **பல கட்சி முறை** - இந்தியா , பிரான்ஸ் , ஸ்வீடன் , நார்வே உள்ளிட்ட நாடுகளில் காணப்படுகிறது.
- இந்தியாவில் கட்சிகள் தேசியக் கட்சி, மாநிலக் கட்சி, பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் (சுயேட்சைகள்) என மூன்று படிநிலைகளில் உள்ளன.
- இந்திய தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திரமான சட்டப்பூர்வமான அமைப்பு. இதன் தலைமை இடம் புதுதில்லியில் உள்ளது.

### ஒரு அரசியல் கட்சியை தோற்றுவிக்கும் வழிமுறை

- இந்திய தேர்தல் ஆணையத்தின் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.
- குறைந்தபட்சம் நூறு உறுப்பினர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வாக்காளர் அட்டையை கொண்டிருத்தல் வேண்டும்.
- கட்சி அமைப்பு குறித்த ஆவணத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

### தேர்தல் சின்னங்கள்

- 1968 ஆம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் ஆணையின்படி ஒதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் ஒதுக்கப்படாத சின்னங்கள் என்று இரண்டு வகை உண்டு.
- ஒதுக்கப்பட்ட சின்னம் என்பது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு மட்டுமானது என பொருள்படும்.
- ஒதுக்கப்படாத சின்னம் என்பது அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் சின்னம் ஆகும்
- விலங்குகளின் சின்னங்களை வழங்குவதை தேர்தல் ஆணையம் நிறுத்தியுள்ளது.
- விதிவிலக்காக யானை மற்றும் சிங்கம் ஆகிய சின்னங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.
- மாநில கட்சிகளுக்கு அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக சின்னம் ஒதுக்கீடு செய்யப்படும்.

### தேசியக் கட்சி

- தேசிய கட்சி என்பது இந்தியா முழுவதும் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சியாகும்.
- தேசியக் கட்சி குறைந்த பட்சம் நான்கு மாநிலங்களில் வலிமை உடையதாக இருக்க வேண்டும்
- இது தனக்கென பிரத்தியேகமான சின்னத்தை நாடு முழுவதற்கும் கொண்டிருக்கும்.

### பிராந்திய/மாநிலக் கட்சி

- பிராந்திய அல்லது மாநிலக் கட்சி இதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு சின்னம் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கும். ஆனால் மாநிலத்தில் இத்தகைய சின்னம் வேறு மாநிலத்தில் உள்ள கட்சிக்கும் ஒதுக்கீடு செய்யப்படலாம்.
- இது பிராந்திய மற்றும் மாநில நலன்களை வலியுறுத்துகிறது.

## அலகு - 3

## மாநில அரசு

- ஆங்கிலேயர்களால் இந்தியாவில் கட்டப்பட்ட முதல் கோட்டை புனித ஜார்ஸ் கோட்டை.
- தற்போது இந்த புனித ஜார்ஸ் கோட்டையில் தான் தமிழகச் சட்டமன்றப் பேரவையும், தலைமைச் செயலகமும் அமைந்துள்ளன.
- நம் நாட்டில் 29 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. யூனியன் பிரதேசங்களுள் இந்திய நாட்டின் தலைநகரான புதுதில்லியும் இதில் அடங்கும்.
- இந்திய நாடு, நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பைக் கொண்டுள்ளது.
- மாநில அரசு ஆளுநர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் குழுவை உள்ளடக்கியதாகும்.
- மாநில அரசின் தலைவர் கவர்னர் ஆவார். ஆளுநர் 5 ஆண்டுகளுக்கு குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். சட்டமன்றத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக செயல்படுகிறார்.
- மாநில அரசின் நிருவாக அதிகாரம் முதலமைச்சரிடம் உள்ளது. பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறார்.
- முதலமைச்சர் மற்றும் அமைச்சரவைக் குழுவினர் சட்டமன்றத்திற்கு கூட்டு பொறுப்புடையவர்கள் ஆவர்.
- உயர்நீதிமன்றம் மாநில அரசின் உச்சபட்ச நீதியமைப்பு. உயர்நீதிமன்றம் மாநிலத்தின் ஒட்டுமொத்த பரப்பிற்குமான அதிகார எல்லை உடையது.

## அலகு - 4

## ஊடகமும் ஜனநாயகமும்

- அச்சு இயந்திரம் ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் என்பவரால் 1453ல் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1956ஆம் ஆண்டிலிருந்து ஆகாசவானி (வானிலிருந்து வரும் ஒலி) என்ற பெயரில் வானொலி ஒலிபரப்பை செய்து வருகிறது. இது 1936ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- மக்களாட்சி என்றால் மக்களால் ஆட்சி செய்யப்படுதல் என்பதாகும். இது இரண்டு கிரேக்க சொற்களால் ஆனது. டெமோஸ் (Demos) மக்களைக் குறிக்கிறது. க்ராடோஸ் (Kratos) என்பது அதிகாரம் அல்லது ஆட்சி என்று பொருள்.

## அலகு - 5

## பெண்கள் மேம்பாடு

### இந்தியாவின் ஆண்/பெண் கல்வியறிவு விகிதம் (1951-2011)

| வரிசை எண் | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு | நபர்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்/பெண் கல்வியறிவு இடைவெளி வீதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1951 | 18.33 | 27.16 | 8.86 | 18.30 |
| 2. | 1961 | 28.3 | 40.4 | 15.35 | 25.05 |
| 3. | 1971 | 34.45 | 45.96 | 21.97 | 23.98 |
| 4. | 1981 | 43.57 | 56.38 | 29.76 | 26.62 |
| 5. | 1991 | 52.21 | 64.13 | 39.29 | 24.84 |
| 6. | 2001 | 64.83 | 75.26 | 53.67 | 21.59 |
| 7. | 2011 | 74.04 | 82.14 | 65.46 | 16.68 |

- சாவித்ரிபாய் புலே – முதல் பெண் ஆசிரியர் ஆவார். இந்தியாவில் பெண் கல்வியை செயல்வடிவமாக்கிய ஜோதிராவ்புலே, சாவித்திபாயின் கணவர் ஆவார். இவர்கள் இருவரும் பெண்களுக்கான முதல் பள்ளியை 1848 ஆம் ஆண்டு தொடங்கினார்.

| முதல் பெண் | பெயர் | நாடு |
|---|---|---|
| பிரதம மந்திரி | சிறிமாவோ பண்டாரநாயக் | இலங்கை |
| விண்வெளி | வாலென்டினா தெரேஷ்கோவா | சோவியத் ஒன்றியம் |
| எவரெஸ்ட் சிகரத்தை அளவிட்டவர் | ஜன்கோ தபே | ஜப்பான் |
| ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவர் | சார்லோட் கூப்பர் | இங்கிலாந்து |

## இந்தியாவின் முதன்மை பெண்மணிகள்

- முதல் மகளிர் பல்கலைக்கழகம் மகர்ஷிகார்வே 1916இல் ஐந்து மாணவிகளுடன் புனேவில் SNDT பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார்.
- மத்திய அமைச்சரவையில் பதவி வகித்த முதல் பெண் விஜயலட்சுமி பண்டிட்.
- மத்திய வெளியுறவு அமைச்சர் பதவியை வகித்த முதல் பெண் சுஷ்மா ஸ்வராஜ்.
- மாநிலத்தின் இளம் வயது அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் அவர் 25 வயதாக இருந்தபோது ஹரியானா அமைச்சரவையில் அமைச்சரானார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் சரோஜினி நாயுடு, ஒன்றிணைந்த மாகாணங்களின் பொறுப்பாளர் ஆனார்.
- ஐக்கிய நாடுகளின் பொது சபையில் முதல் பெண் தலைவர் விஜயலட்சுமி பண்டிட் (1953).
- இந்தியாவில் முதல் பெண் பிரதமர் – இந்திராகாந்தி (1966).
- முதல் பெண் காவல்துறை உயர் அதிகாரி - கிரண்பேடி (1972).
- அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண் அன்னைதெரசா (1979).
- எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் இந்திய பெண் பச்சேந்திரி பால் (1984).
- புக்கர் பரிசு வென்ற முதல் இந்திய பெண் அருந்ததி ராய் (1997).
- முதல் பெண் குடியரசுத் தலைவர் பிரதிபா பாடீல் (2007).
- மக்களவையின் சபாநாயகர் பதவிவகித்த முதல் பெண் சபாநாயகர் மீராகுமார் (2009).
- உச்ச நீதிமன்ற முதல் பெண் நீதிபதி மீராசாகீப் பாத்திமா பிவி.
- இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் அன்னிபெசன்ட்.
- இந்தியாவின் முதல் பெண் மாநில முதலமைச்சர் சுச்சித கிருபாளினி.
- முதல் பெண் காவல்துறை இயக்குநர் காஞ்சன் சௌத்ரி பட்டாச்சாரியா.
- இந்தியாவின் முதல் பெண் பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீத்தாராமன்.
- இந்தியாவின் முதல் பெண் நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன்.

Vetripadigal.com

## அலகு - 6

## சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

### சந்தைகளின் வகைப்பாடு

- ✓ சந்தைகள் இரண்டு வகைகளாக உள்ளன. அவை தயாரிப்பு சந்தை மற்றும் காரணிச் சந்தை.
- ✓ காரணிச் சந்தை என்பது நிலம், மூலதனம், உழைப்பு போன்ற உற்பத்திக் காரணிகளை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்குமான சந்தையைக் குறிப்பதாகும்.
- ✓ இந்தியாவில் தொலைதொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (TRAI), மற்றும் ஆயுள் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் இந்தியாவின் மேம்பாட்டு ஆணையம் (IRDAI),

### நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986

- ✓ அக்டோபர் 1986 இல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 1986 டிசம்பர் 24 முதல் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது.
- ✓ நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் நுகர்வோருக்கனா மகா சாசனம் என்று அழைக்கப்படுகிறது.

### எட்டு அடிப்படையான நுகர்வோர் உரிமைகள்

- ✓ அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை
- ✓ பாதுகாப்புக்கான உரிமை
- ✓ தகவல் அறியும் உரிமை
- ✓ தேர்ந்தெடுக்கும் உரிமை
- ✓ பிரதிநிதித்துவ உரிமை
- ✓ குறை தீர்க்கும் உரிமை
- ✓ நுகர்வோர் கல்வி மற்றும் உரிமை
- ✓ தூய்மையான சுற்றுப்புறத் சூழலைப் பெறுவதற்கான உரிமை.

### நுகர்வோர் குறை தீர்க்கும் முகவர்

- ✓ தேசிய நுகர்வோர் குறை தீர் ஆணையம் மத்திய அரசால் நிறுவப்பட்டது. இவ்வாணையம் 1 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை தீர்க்க முயல்கிறது. இது மத்திய நுகர்வோர் நீதிமன்றம் ஆகும்.

- மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மாநில அரசால் நிறுவப்பட்டது. இவ்வாணையம் 1 கோடி ரூபாய்க்கும் குறைவான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை மாநில அளவிலாக தீர்க்கும் நீதிமன்றமாகும்.
- மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநில அரசால் நிறுவப்பட்டு அது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் எனவும் அழைக்கப்படுகிறது.
- மாநில அரசாங்கம் ஒரு மாவட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்ட மன்றங்களை நிறுவலாம். இது மாவட்ட அளவிலான நீதிமன்றமாகும். இது ஒரு 20 லட்சம் மதிப்புமிக்க அளவிலான குறைகளை தீர்க்கும் மாவட்ட நீதிமன்றமாகும்.

**நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019**

- இந்திய பாராளுமன்றத்தில் ஆகஸ்ட் 2019 ஆம் ஆண்டு ஒரு மைல்கல் என்று அழைக்கப்படும் நுகர்வோர் பாதுகாப்பு மசோதா, 2019ல் நிறைவேற்றப்பட்டது.

**புதிய சட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- தவறான விளம்பரத்திற்கு அபராதம்: தவறான விளம்பரத்திற்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஒரு உற்பத்தியாளர் அல்லது ஒப்புதல் அளிப்பவருக்கு 1,000,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம்.தவறான விளம்பரத்திற்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கலாம். அடுத்தடுத்த குற்றத்தில் அபராதம் 5,000.000 ரூபாய் மற்றும் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

**இந்தியாவில் நுகர்வோர் நீதிமன்றங்கள்**

**தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்:**

- இது 1986 ஆம் ஆண்டில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1988 இல் அமைக்கப்பட்டது. அதன் தலைமை அலுவலகம் புது டெல்லியில் உள்ளது.
- இந்த ஆணையம் அதனை இந்தியாவில் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் செயல்படுகிறது.



Vetripadigal.com

### மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

- ✓ மாநில அளவில் ஒரு நீதிமன்றம் செயல்படுகிறது. இழப்பீடு கோரப்பட்ட வழக்குகள் 20 லட்சத்திற்கும் மேல் இருக்குமானால் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் அதனை ஏற்கிறது.

### மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்

- ✓ நீதிமன்றம் இழப்பீடு 20 லட்சம் வரை விசாரிக்க அனுமதிக்கிறது.

### முக்கியமான சட்டங்கள்

- ✓ நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986
- ✓ சட்ட அளவீடு சட்டம், 2009.
- ✓ இந்திய தர நிர்யண பணியகம், 1986
- ✓ அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955
- ✓ கறுப்பு சந்தைப்படுத்துதல் தடுப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பராமரிப்பு பொருட்களின் சட்டம், 1980

## அலகு – 7

## சாலைப் பாதுகாப்பு

- இந்திய சட்டப்படி, ஒருவர் வாகன ஓட்டுநர் உரிமம் பெறும் வயது 18 ஆகும்.
- சாலை போக்குவரத்துச் சட்டம், பாராளுமன்றத்தால் 1988இல் ஏற்படுத்தப்பட்டு, 1989ல் நாடு முழுவதற்குமாக நடைமுறைபடுத்தப் பட்டுள்ளன.
- சாலை போக்குவரத்துச் சட்டம், பாராளுமன்றத்தால் 1988ல் ஏற்படுத்தப்பட்டு, 1989ல் நாடு முழுவதிற்குமாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.
- ஒரே பகுதியிலிருந்தோ அல்லது ஒரே வழித்தடத்தில் தினந்தோறும் மகிழுந்து அல்லது இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் அதே இடத்திற்கோ அல்லது அதே தடத்தில் செல்பவர்களை உடன் அழைத்துச் செல்வதே கார்பூலிங் ஆகும்.
- ரக் ஷா பாதுகாப்பான வாகன இயக்கம் – ரக் ஷா ஒரு தானியங்கி கருவி. இது வாகனத்தில் பொருத்தப்படும்.